[2020 ஜனவரி 7

2—

நூலகம்

***51524—டாக்டர் ப. சரவணன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, பிரசன்னா காலனியில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நம்முடைய தமிழகம் நிருவாகத் திறனில் முதலிடத்தைப் பெறுகின்ற அளவிற்கு பெருமை சேர்த்திருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட திருப்பரங்குன்றம் தொகுதி, மதுரை மாநகராட்சி, பிரசன்னா காலனியில் நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. அதற்கான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் அதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன் அவர்கள்.*

டாக்டர் ப. சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தான் வாழ்ந்த காலத்தில் ஒரு நடமாடும் நூலகமாகத் திகழ்ந்த மறைந்த தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். இன்றைய உள்ளாட்சி நாயகர், நாளை நல்லாட்சி தரவிருக்கின்ற எங்களுடைய மாண்புமிகு கழகத் தலைவர், (மேசையைத் தட்டும் ஒலி) இன்றளவில் 1½ இலட்சத்திற்கும் மேற்பட்ட புத்தகங்களை தமிழகத்தில் உள்ள பல்வேறு நூலகங்களுக்குத் தொடர்ந்து வழங்கிக் கொண்டிருக்கின்ற எங்களுடைய கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன். தங்கள் மூலமாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்*

2020 ஜனவரி 7]

அவர்களிடம் எனது திருப்பரங்குன்றம் தொகுதியில், மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பிரசன்னா காலனியில் பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் ஒரு நூலகம் அமைத்துத் தர முடியுமா என்று கேட்டிருந்தேன்.

முற்பகல் 10–35

District Library Officer*–ஐக் கேட்டபொழுது, அவர்கள் 5* norms *சொன்னார்கள். அந்த* norms*–ல்* Membership *200 பேர் என்று சொன்னார்கள்; அதை எளிதாகச் செய்ய முடிகிறது.* Non–rental building*; அதாவது, வாடகையில்லாக் கட்டடம் கேட்கிறார்கள், அதுவும் முடிகிறது.* Furniture*–க்கு 2 ஆயிரம் ரூபாய் கேட்கிறார்கள், அதுவும் முடிகிறது.* Subscription fee, *2* patron (புரவலர்) *கேட்கிறார்கள், 6 ஆயிரம் ரூபாய் கேட்கிறார்கள். அதுவும் முடிகிறது. ஆனால், 5 சென்ட் இடம் கேட்கிறார்கள். அதை* acquire *செய்வதில் பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த அரசு, ஊரக உள்ளாட்சித் தேர்தலோடு மாநகராட்சிகளுக்கும் தேர்தலை நடத்தியிருந்தால், பிரதிநிதிகள் இந்நேரம் பதவியேற்றிருப்பார்கள். அதனால், இடத்தைப் பெறுவதற்கான வாய்ப்புகள்கூட அமைந்திருக்கும்.*

இன்றைய தேதியில், இந்திய அளவில் பாலியல் குற்றங்கள் அதிகரித்திருக்கக்கூடிய நிலையில், ஏன், தமிழகத்திலும்கூட, பத்திரிகைகளைத் திறந்து பார்த்தால், எங்கு பார்த்தாலும் பாலியல் குற்றங்கள் குறித்த செய்தி இருக்கக்கூடிய நிலையில் (குறுக்கீடுகள்) *சொல்லி முடித்துவிடுகிறேன். கட்சி பேதமின்றி. . .* (குறுக்கீடுகள்) *நம் எல்லோருக்கும் குழந்தைகள் இருக்கிறார்கள். அதனால், ஒரு தந்தையாக. . .* (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்வி நேரத்தில் முடிந்தவரை குற்றச்சாட்டுகள் இல்லாதவாறு பேச வேண்டும்.*

டாக்டர் ப. சரவணன்: *சரி. வாசிக்கும் பழக்கத்தை மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும் அதிகம் ஏற்படுத்த வேண்டும் என்று அனைவரும் விரும்பக்கூடிய இந்த நிலையில், இந்த 5 சென்ட் இடம் என்பது சிறிய இடம்தான். தற்போதுகூட அரசாங்கம்* AIIMS*–க்கு 200 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தை எடுக்கிறது.* Airport *விரிவாக்கத்திற்கு 600 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலத்தை எடுக்கிறது. 5 சென்ட் என்பது மிக மிகக் குறைவான*

இடம்தான். அதை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு, நூலகம் அமைப்பதற்கு வழி ஏற்படுத்திக்கொடுத்தால், மாணவர்களும், இளைஞர்களும் நன்கு படிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்கள் வழியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற தமிழக அரசு, நீங்கள் சொன்னதைப்போல அதற்கு மேலும் பல்வேறு காரியங்களைச் செய்திருக்கிறது, நூலகத்தைப் பொறுத்தவரையில். யாழ்ப்பாணத்தில் இருந்த நூலகம் எரிக்கப்பட்டதற்குப் பிறகு அம்மா வழியில் நடந்து கொண்டிருக்கிற தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 1 இலட்சம் பிரதிகளை (மேசையைத் தட்டும் ஒலி) சிறந்த நூலகத்திற்கு நாம் வழங்கியிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தமிழர்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ, அங்கெல்லாம் இருக்கின்ற நூலகங்களுக்கு 5 ஆயிரம் பிரதிகளை நாங்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றோம், தமிழகத்தில் இன்றைக்கு சரித்திரம் படைக்கப்பட்டு வருகிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அனைத்து norms–ஐயும் பூர்த்தி செய்துவிடுவோம், 5 சென்ட் நிலம் மட்டும்தான் இல்லையென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தாங்கள் தற்காலிகமாக ஓர் இடத்தைத் தந்தால், அங்கே நூலகம் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ப. சரவணன் அவர்கள்.

டாக்டர் ப. சரவணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத் தலைவர் அவர்களின்

ஆணைக்கிணங்க, நாங்கள் பல்வேறு ஊராட்சிகளில் நூலங்களைத் திறந்துகொண்டிருக்கின்றோம். தற்போது computer centre-ம் தொடங்கி, அங்கே மாணவர்களுக்கு இலவசமாக பயிற்சி வழங்கிக் கொண்டிருக்கின்றோம். என்னுடைய தொகுதியில், திருப்பரங்குன்றம் town–ல் இருக்கக்கூடிய நூலகமானது 1956, ஆகஸ்டு 15 ஆம் தேதி தொடங்கப்பட்டது. சொந்தக் கட்டடம் இல்லாததால், 62 வருடங்களுக்கும் மேலாக அது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அவனியாபுரத்தில் உள்ள நூலகத்திற்கும் சொந்தக் கட்டடம் இல்லை. அவற்றை அமைத்துக் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும். மேலும், 3–7–2018 அன்று சட்டமன்றத்தில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், நூலகர்களுக்கான (Librarian) ஊதிய முறை மற்றும் பணி விதிகள் சார்ந்து பரிசீலனை செய்து அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருந்தார்கள். அந்தக் கோரிக்கை என்னவாயிற்று என்பதையும் ஒரு துணைக் கேள்வியாக இந்த நேரத்தில் நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நூலக இயக்ககத்தின்கீழ் புதிதாகத் திறக்கப்படும் நூலகங்கள் மற்றும் ஏற்கெனவே வாடகை/இலவசக் கட்டடங்களில் செயல்பட்டு வரும் நூலகங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டடம் கட்ட 50 சதவிகித நிதி வழங்கும்பட்சத்தில் சம்பந்தப்பட்ட மாவட்ட நூலக ஆணைக் குழுவில் போதுமான நிதி ஆதாரம் இருப்பின், இட வசதியுள்ள நூலகங்களுக்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். நூலகங்களில் இருக்கிற நூலகர்கள் குறித்த கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.